# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.170/மா/2024
நாள் 07.07.2025

திரு. கு. சந்திரன்,
மதுரை–17. --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையர்,
மண்டலம் 1,
மதுரை மாநகராட்சி.

(2) திரு. தி. வேணுகோபால்,
சக்தி நகர்,
மதுரை. --- எதிர் மனுதாரர்கள்

மதுரை, தபால் தந்தி நகர் அஞ்சல், பார்க் டவுன், கோல்டன் அவென்யு தெரு, கதவு எண் 12 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கு. சந்திரன் என்பவரின் 03.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2024 அன்று பெறப்பட்டு, 170/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, தபால் தந்தி நகர் அஞ்சல், பார்க் டவுன், கோல்டன் அவென்யு தெரு, கதவு எண் 12 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கு. சந்திரன் என்பவர் தனது 03.09.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"எனது வீடு மதுரை மாநகராட்சி மண்டலம் Iல் வார்டு எண் 8 (முந்தைய வார்டு எண் 25) கதவு எண் 354, கண்ணனேந்தல் ரோடு, அய்யர் பங்களா, மதுரை 14ல் உள்ளது. என் வீட்டை ஒட்டி வலதுபுறம் தி.வேணு கோபால் என்பவரது வீடு உள்ளது.

மேற்படி நபரின் வீடானது (திரு.தி.வேணுகோபால் வீடு) மிகவும் சேதமுற்றுள்ளது. ஆதலால் பொதுநலன் கருதி வீட்டை இடித்து (ஒரு வார காலத்திற்குள்) அப்புறப்படுத்த வேண்டுமென மதுரை மாநகராட்சிப் பொறியாளர் திருமதி ஜெயா அவர்கள் 27.12.2021–ல் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அறிவிப்பு நகல் இணைத்துள்ளேன்.

மேற்படி அறிவிப்பின்படி சேதமுற்ற கட்டடம் பொதுமக்கள் நலன் கருதி கட்டடம் இடியும் பட்சத்தில் அதனைச் சுற்றியுள்ள மூன்று கட்டடங்கள் சேதமடைவதுடன் உயிர் பலியும் ஏற்படும். மேலும் வீட்டின் முன்புறம் சாலையில் பயணிப்போரும் உயிரிழக்க நேரிடும்.

மேற்படி அறிவிப்பின்படி கட்டடம் இதுவரை இடிக்கப்படவில்லை. அறிவிப்பிற்குப் பின் சுமார் எட்டு மாதங்கள் கடந்த பின் 05.09.2022ல் மண்டலம் 1–ச் சார்ந்த உதவிப்பொறியாளர் ஆய்வு செய்ததாகவும் கட்டடம் Frame Structure செய்யப்பட்டுள்ளது. கட்டடத்தின் இரு பக்க சுவர்கள் மட்டும் பூசப்படவில்லை என்றும் மண்டலம்1–ன் உதவி ஆணையர் தகவலை 06.09.2022 கடிதம் மூலம் தெரிவித்தார்.

மேற்படி கட்டடம் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை என்றும், வீட்டின் உரிமையாளர் தன் சுய லாபத்திற்காக பொதுப்பணித்துறை கால்வாய் மற்றும் சாலை ஆக்கிரமிப்பு செய்ததை Frame Structure என கூறும் தகவல் சுய லாப நோக்கமுடையது எனவும் கூறி ஆட்சேபித்து 12.9.2022ல் ஆட்சேப மனுவை மதுரை மாநகராட்சி ஆணையருக்கும், உதவி ஆணையருக்கும் சமர்ப்பித்துள்ளேன்.

இதன் பின் 21.02.2023–ல் என் முன்னிலை சேதமுற்ற கட்டடத்தை ஆய்வு செய்த மண்டலம் I ன் உதவிப்பொறியாளர் திரு.முருகேசப்பாண்டியன் “கட்டடம் சேதமுற்றுள்ளது”. கட்டடம் இடிக்கப்படவேண்டுமென கூறிச் சென்றார். என்ன நடந்தது என்று தெரியவில்லை. உதவி ஆணையரின் 27.02.2023 கடிதத்தில் சம்பந்தமே இல்லாமல் கழிவு நீர் வெளியேறும் பகுதி அடைக்கப்பட்டுவிட்டதென தெரிவிக்கப்பட்டது மேற்படி பொறியாளர் சுயலாபம் கருதி அறிக்கை வழங்கி இருக்கலாமென சந்தேகிக்கின்றேன்.

இதன்பின் மதுரை மாநகராட்சி மண்டலம் I ன் நிர்வாக அலுவலரின் 20.5.2023 கடிதத்தில் “சேதமுற்ற கட்டடம் 29.3.2023ல் மண்டலம் I ன் உதவிப் பொறியாளர், உதவி திட்டப் பொறியாளர், உதவி ஆணையர் மற்றும் களப்பணியாளர்கள் அனைவரும் ஆய்வு செய்ததாகவும் கட்டடம் Frame structure செய்யப்பட்டுள்ளது. கட்டடத்தின் ஒரு பக்க சுவர் மட்டும் பூசப்படவில்லை” எனவும் தெரிவிக்கப்பட்டது.

சேதமுற்ற கட்டடத்தை முழுமையாக ஆய்வு செய்யவேண்டுமானால் என் வீட்டு வளாகத்திற்குள் நுழைய வேண்டும். என் வீட்டு காம்பவுண்டு சுவர் சுமார் பத்தடி உயரம் சுவர் ஏறிக் குதிக்க முடியாது என் அனுமதியின்றி உள் நுழைய முடியாது.

05.09.22ல் கட்டடம் ஆய்வு செய்யாமலேயே இரு பக்கசுவர் பூசப்படாமல் உள்ளதென 06.09.22 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. 29.03.23ல் ஆய்வு செய்ததாக கூறி (ஆய்வு செய்யாமல்) ஒரு பக்கசுவர் மட்டும் பூசப்படவில்லையென 20.05.23 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. கட்டடம் ஆய்வு செய்யப்படவில்லையென்பதற்கு இதுவும் பொய் எனஅறியலாம்.

சுய லாபம் நோக்கில் தகவல் தரப்பட்டதை ஆட்சேபித்து 26.05.23 முதல் 15க்கு மேற்பட்ட மனுக்களை சமர்ப்பித்துள்ளேன். படிவத்தில் சில மனுக்கள் மட்டும் குறிப்பிட்டுள்ளேன். தக்க நடவடிக்கை எடுக்க மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 30.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 1 (கிழக்கு)–ன் உதவி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.ம121/002328/2025, நாள் 30.04.2025 மற்றும் 02.06.2025–ன் வழி அனுப்பப்பட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் –

“மேற்படி கட்டிட உரிமையாளருக்கு மண்டலம் 2, உதவிப் பொறியாளர் மூலமாக வழங்கப்பட்ட அறிவிப்பில், மேற்கண்ட கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும், சொந்த செலவில் இடித்து அப்புறப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மதுரை மாநகராட்சியில், 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்ட நிலையில், மேற்படி முகவரியுள்ள கட்டிடம் மண்டலம் 1–ற்கு உட்பட்டது என்பதால் இக்கோப்பு மண்டலம் 2–லிருந்து மண்டலம் 1–ல் பெறப்பட்டது.

திரு.வேணுகோபால் (கட்டிட உரிமையாளர்) என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கண்ட கட்டிடத்திற்கான Stability Certificate நகல் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

திரு.வேணுகோபால் (கட்டிட உரிமையாளர்) என்பவரின் மனுவில் தனக்கு முன்பு கட்டிட உரிமையாளரிடம் கிழக்கு பக்க சுவரை பூசி கொள் என்று ரூ.50,000/-பெற்றுக் கொண்டு சுவரை பூச விடாமல் தடுத்து விட்டார் எனவும், எனவே இவர் செய்யும் செயல் பணம் பறிக்கும் நோக்கில் உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே தனது கட்டிடம் சம்பந்தமான ஆவணங்களை தெரிவிக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு தகவல் ஆணை விசாரணை அறிவிப்பு வழக்கு விசாரணையில் தகவல் ஆணைய வழிகாட்டுதலின்படி, உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் 16.05.2023ந் தேதிய அறிக்கையின்படி, மேற்கண்ட மனுதாரர் திரு. கு. சந்திரன் என்பவருக்கு மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் கடிதம் எண்.ம1ஈ1/001540/2023, நாள் 20.05.2023–ல் தாங்கள் குறிப்பிடும் கட்டிடம் Frame Structure அமைத்து கட்டப்பட்டுள்ளது எனவும், அதனால் இடிந்து விழும் நிலையில் இல்லை, அக்கட்டிடம் ஒருபுறம் பூச்சு வேலை செய்யப்படாமல் உள்ளது. மேலும் கட்டிடம் நல்ல நிலையில் உள்ளது, அபாயகரமான நிலையில் இல்லை என்ற விபரம் தகவலாக திரு. கு. சந்திரன் என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் 28.04.2025 நாளிட்ட குறிப்பின்படி தற்போது கடந்த 19.04.2025 அன்று கட்டிட உரிமையாளர் மற்றும் மனுதாரர் இருவரையும் புகார் கட்டிட இருப்பிடத்தில் அவர்கள் முன்னிலையில் உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் உதவி ஆணையர் (பொ) அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது. அதன் புகைப்பட நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்படி கட்டிடத்திற்கான உறுதி தன்மைச் சான்று தற்போது பொதுப்பணித்துறையிடமிருந்து பெற்று மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கட்டிட உரிமையாளர் திரு. வேணுகோபால் என்பவருக்கு 30.04.2025–ல் கடிதம் அனுப்பப்பட்டது”என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், மதுரை மாநகராட்சி, வார்டு எண் 25, புதிய வார்டு எண் 8, மண்டலம் எண் 1 என்ற முகவரியில் திரு. சத்தியவான் உரிமையாளர் கைவசம் உள்ள கட்டிடத்திற்கு 27.12.2021 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதற்கு உதவிப் பொறியாளர் தன்னுடைய விளக்கத்தினை கீழே கண்டுள்ளவாறு 30.05.2025 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்:

> “மதுரை 14, கண்ணனேந்தல், அய்யர் பங்களாவிலிருந்து மூன்றுமாவடி மெயின் சாலையில் அமைந்துள்ள கட்டிடமானது அதன் கிழக்கு பக்க உள்ள சுவற்றில் உள்ள செங்கற்கள் தனது வீட்டு பக்கம் பெயர்ந்து கீழே வருவதாகவும் தனக்கு அச்சம் தரும் வகையில் இருப்பதாகவும், மேற்கண்ட முகவரிக்கு கிழக்குபுறம் உள்ள குடியிருப்பு வாசி பலமுறை மனு கொடுத்ததன் அடிப்படையில் அன்றைய காலகட்டத்தில் கட்டிடத்தை நேரடியாக சென்று பார்வையிடப்பட்ட போது கட்டிடம் உபயோகமற்ற நிலையில் Pillar கம்பிகள் துருப்பிடித்து செங்கற் கட்டிடம்

கற்கள் ஆங்காங்கே இல்லாமல் பூசப்படாத நிலையில் முன்புறம் உள்ள சுவர்கள், Sunshade Crack விழுந்து இருந்ததால் சுவான்தாரருக்கு மராமத்து பணிகள் பார்ப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. அவர்கள் பணிகள் மேற்கொள்ளப்படாமல் அலட்சியமாக இருந்ததால் மேற்கண்ட மதுரை மாநகராட்சி சட்டம், 1971 பிரிவு 327–ன்படி தாங்கள் முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்பதற்காக உரிய அறிவிப்பு வழங்கப்பட்டது.''

மேற்கண்டவாறு புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடம் தொடர்பான விரிவான அறிக்கையாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் மற்றும் திரு. தி. வேணுகோபால் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.05.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரின் சார்பாக அவரது மகன் திரு. ச. அருண்குமார் என்பவர் 04.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில் –

''எனது வீடு மதுரை மாநகராட்சி மண்டலம்1ல் வார்டு எண் 8 (முந்தைய வார்டு எண் 25) கதவு எண் 354, கண்ணனேந்தல் ரோடு, அய்யர் பங்களா, மதுரை 14ல் உள்ளது என்றும், எனது வீட்டை ஒட்டி வலதுபுறம் தி.வேணு கோபால் என்பவரது வீடு மிகவும் சேதமுற்றுள்ளது என்று அளித்த மனுவின் மீது, மதுரை மாநகராட்சி பொறியாளர் 27.12.2021 அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். மேற்படி அறிவிப்பின்படி சேதமுற்ற கட்டடம் பொது மக்கள் நலன் கருதி கட்டடம் இடியும் பட்சத்தில் அதனைச் சுற்றியுள்ள மூன்று கட்டடங்கள் சேதமடைவதுடன் உயிர் பலியும் ஏற்படும் என்றும் மேலும் வீட்டின் முன்புறம் சாலையில் பயணிப்போரும் உயிரிழக்க நேரிடும். ஆனால் மேற்படி அறிவிப்பின்படி கட்டடம் இதுவரை இடிக்கப்படவில்லை. அறிவிப்பிற்குப் பின் சுமார் எட்டு மாதங்கள் கடந்தபின் 05.09.2022 மண்டலம் 1ச் சார்ந்த உதவிப்பொறியாளர் ஆய்வு செய்ததாகவும் கட்டடம் Frame Structure செய்யப்பட்டுள்ளது என்றும் கட்டடத்தின் இரு பக்க சுவர்கள் மட்டும் பூசப்படவில்லை என்றும் மண்டலம்1ன் உதவி ஆணையர் தகவலை 06.09.2022 கடிதம் மூலம் தெரிவித்தார். மேற்படி கட்டடம் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. பொதுப்பணித்துறை கால்வாய் மற்றும் சாலை ஆக்கிரமிப்பு செய்ததை Frame Structure என கூறும் தகவலை ஆட்சேபித்து 12.9.2022ல் ஆட்சேப மனுவை மதுரை மாநகராட்சி ஆணையருக்கும் உதவி ஆணையருக்கும் சமர்ப்பித்துள்ளேன். மேலும் மேற்கண்ட கட்டிடத்தினை ஆய்வு செய்யாமலே ஒரு பக்கம் சுவர் மட்டும் பூசபடவில்லை என 20.05.2023ல் மதுரை மாநகராட்சி கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல் பொய்யானது என்பது ஊர்ஜிதமாகிறது. மேலும், திரு.வேணுகோபால் அவர்கள் பொதுப்பணித்துறையின் கால்வாயை மறித்து கட்டிடம் கட்டியுள்ளார். மேலும் கழிவு நீரை முறைக்கேடாக கால்வாயில் விட்டுள்ளார்.

எனவே மேற்கண்ட கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விழுந்து உயிர் பலி ஏற்படும் என்பதால் அக்கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறப்படுத்தவும் பொதுப்பணித்துறை கால்வாய் ஆக்கிரமிப்பினை அகற்றவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 04.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில்–

“மேற்படி கட்டிட உரிமையாளருக்கு மண்டலம் 2ன் உதவிப் பொறியாளர் 27.12.2021 நாளிட்டு வழங்கிய அறிவிப்பில் மேற்கண்ட கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும், சொந்த செலவில் இடித்து அப்புறப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி மண்டலங்களாக பிரிக்கப்பட்ட நிலையில் மேற்படி முகவரியுள்ள கட்டிடம் மண்டலம்1–ற்கு உட்பட்டது என்பதால் கோப்பு மண்டலம் 2லிருந்து மண்டலம் 1–ல் பெறப்பட்டது என்றும், கட்டிட உரிமையாளர் திரு.வேணுகோபால் மேற்கண்ட கட்டிடத்திற்கான Stability Certificate சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் 16.05.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட கட்டிடம் தாங்கள் குறிப்பிடும் கட்டிடம் Frame Structure அமைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், அதனால் இடிந்து விழும் நிலையில் இல்லை என்றும், அக்கட்டிடம் ஒருபுறம் பூச்சு வேலை செய்யப்படாமல் உள்ளது என்றும், மேலும் கட்டிடம் நல்ல நிலையில் உள்ளது, அபாயகரமான நிலையில் இல்லை என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 19.04.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிட உரிமையாளர் மற்றும் மனுதாரர் இருவரையும் புகார் கட்டிட இருப்பிடத்தில் அவர்கள் முன்னிலையில் உதவிப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் உதவி ஆணையர் (பொ)அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது என்றும், மேற்படி கட்டிடத்திற்கான உறுதி தன்மைச் சான்று தற்போது பொதுப்பணித்துறையிடமிருந்து பெற்று மண்டலம் 1 அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கட்டிட உரிமையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட கட்டிடம் குறித்த 03.06.2025 அன்று எடுக்கப்பட்ட புகைப்பட நகல்களை மாண்புமிகு முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். ” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மற்றொரு எதிர்மனுதாரரான திரு.T.வேணுகோபால் அவர்களின் சார்பாக திரு.G.சந்திரசேகரன் என்பவர் 04.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில் –

“மதுரை கண்ணனேந்தல் மெயின் ரோடு, கதவு எண் 2/355 என்ற கட்டிடம் சில ஆண்டுகளுக்கு முன்பு திரு.வேணுகோபால் அவர்களால் கிரையம் பெறப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்திற்கு இடது பக்கம் உள்ள கட்டிட உரிமையாளர் உள் நோக்கத்துடன் அக்கட்டிடம் பழுது அடைந்து இருப்பதாக கூறி மேற்கண்ட கட்டிடத்தை இடிக்க வேண்டும் என்று பொய்யான தகவலுடன் தொடர்ந்து மதுரை மாநகராட்சிக்கு மனுக்கள் அனுப்பி மன உளைச்சல் அளித்து வருகிறார். மதுரை மாநகராட்சி மண்டலம் 1ன் அலுவலர்கள் ஆய்வு செய்த போது, மதுரை மாநகராட்சி அங்கீகாரம் பெற்ற பொறியாளர் திரு.பாஸ்கர் என்பவர் ஆய்வு செய்து மேற்கண்ட கட்டிடம் வலிமையாக உள்ளது என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் திரு.கு.சந்திரன் அவர்கள் மேற்கண்ட கட்டிடத்தின் பழைய உரிமையாளரிடம் ஒரு பக்கம் சுவரை பூசுவதாக கூறி ரூ.50,000/–ஐ பெற்றுக் கொண்டு இது வரை அச்சுவற்றை பூச விடாமல் தடுத்து வருகிறார். மேலும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் தலைமையில் 25.04.2025 அன்று மேற்கண்ட கட்டிடத்தை கள ஆய்வு செய்த போது பொதுப்பணித்துறையிடமிருந்து கட்டிட உறுதித் தன்மை குறித்த சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேற்படி திரு.கு.சந்திரன் கட்டிடத்திற்கும் திரு.வேணுகோபால் கட்டிடத்திற்கும் இடையில் சுமார் 10 அடி இடைவெளி உள்ளது. அதன்படி உறுதி சான்றிதழினை விரைவில் பெற்று சமர்ப்பிக்கப்படும் என்றும் அதுவரை மேற்கண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அவரது சார்பாக அவரது மகன் திரு. ச. அருண்குமார் என்பவரின் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு), உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மற்றொரு

எதிர்மனுதாரர் திரு.T.வேணுகோபால் என்பவரின் சார்பாக ஆஜரான திரு.G.சந்திரசேகரன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

"மனுதாரர் தனது வீடு மதுரை மாநகராட்சி மண்டலம்1–ல் வார்டு எண் 8 (முந்தைய வார்டு எண் 25) கதவு எண் 354, கண்ணனேந்தல் ரோடு, அய்யர் பங்களா, மதுரை 14ல் உள்ளது என்றும், தனது வீட்டை ஒட்டி வலதுபுறம் தி.வேணு கோபால் என்பவரது வீடு மிகவும் சேதமுற்றுள்ளது என்று அளித்த மனுவின் மீது, மதுரை மாநகராட்சி பொறியாளர் 27.12.2021 அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார் என்றும், மேற்படி அறிவிப்பின்படி சேதமுற்ற கட்டடம் பொது மக்கள் நலன் கருதி கட்டடம் இடியும் பட்சத்தில் அதனைச் சுற்றியுள்ள மூன்று கட்டடங்கள் சேதமடைவதுடன் உயிர் பலியும் ஏற்படும் என்றும் மேலும் வீட்டின் முன்புறம் சாலையில் பயணிப்போரும் உயிரிழக்க நேரிடும் எனவும், இவ்வறிவிப்பிற்குப் பின் சுமார் எட்டு மாதங்கள் கடந்தபின் 05.09.2022 மண்டலம் 1–ச் சார்ந்த உதவிப்பொறியாளர் ஆய்வு செய்ததாகவும், கட்டடம் Frame Structure செய்யப்பட்டுள்ளது என்றும் கட்டடத்தின் இரு பக்க சுவர்கள் மட்டும் பூசப்படவில்லை என்று மண்டலம்1–ன் உதவி ஆணையர் 06.09.2022 கடிதம் மூலம் தெரிவித்தார் எனவும், மேற்படி கட்டடம் முழுமையாக ஆய்வு செய்யாமல், ஒரு பக்கம் சுவர் மட்டும் பூசபடவில்லை என 20.05.2023ல் மதுரை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டதாகவும், மேலும் திரு.வேணுகோபால் பொதுப்பணித்துறையின் கால்வாயை மறித்து கட்டிடம் கட்டியுள்ளார் எனவும், மேலும் கழிவு நீரை முறைக்கேடாக கால்வாயில் விட்டுள்ளார் எனவும், எனவே மேற்கண்ட கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விழுந்து உயிர் பலி ஏற்படும் என்பதால் அக்கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறப்படுத்தவும் பொதுப்பணித்துறை கால்வாய் ஆக்கிரமிப்பினை அகற்றவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான மனுதாரரின் மகன் திரு.ச.அருண்குமார் அவர்களின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்படி கட்டிட உரிமையாளருக்கு மண்டலம் 2ன் உதவிப் பொறியாளர் 27.12.2021 நாளிட்டு வழங்கிய அறிவிப்பில் Pillar கம்பிகள் துருபிடித்து செங்கல் கட்டிடம் பூசப்படாத நிலையில் இருந்தாலும், Sun shade crack விழுந்து இருந்ததால், மராமத்து பணிகள் மேற்கொள்ளுமாறும், அதனை செயல்படுத்தாததால், மதுரை மாநகராட்சி சட்டம், 1971, பிரிவு 327–ன்படி முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது எனவும், கட்டிட உரிமையாளர் திரு.வேணுகோபால் மேற்கண்ட கட்டிடத்திற்கான Stability Certificate சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் 16.05.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட கட்டிடம் Frame Structure அமைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், அதனால் இடிந்து விழும் நிலையில் இல்லை என்றும், அக்கட்டிடம் ஒருபுறம் பூச்சு வேலை செய்யப்படாமல் உள்ளது என்றும், மேலும் கட்டிடம் நல்ல நிலையில் உள்ளது, அபாயகரமான நிலையில் இல்லை என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது 19.04.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிட உரிமையாளர் மற்றும் மனுதாரர் இருவரையும் புகார் கட்டிட இருப்பிடத்தில் அவர்கள் முன்னிலையில் உதவிப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் உதவி ஆணையர் (பொ)அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது புகைப்பட நகல்கள் மூலம் அறிய முடிகிறது என்பதும், மேற்படி கட்டிடத்திற்கான உறுதி தன்மைச் சான்று தற்போது பொதுப்பணித்துறையிடமிருந்து பெற்று மண்டலம் 1 அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

எதிர்மனுதாரர் திரு. T.வேணுகோபால் சார்பாக ஆஜரான திரு. G. சந்திரசேகரன், மதுரை கண்ணனேந்தல் மெயின் ரோடு, கதவு எண் 2/355 என்ற கட்டிடம் சில

ஆண்டுகளுக்கு முன்பு திரு.வேணுகோபால் அவர்களால் கிரையம் பெறப்பட்டது எனவும், மேற்கண்ட கட்டிடத்திற்கு இடது பக்கம் உள்ள கட்டிட உரிமையாளர் உள் நோக்கத்துடன் அக்கட்டிடம் பழுது அடைந்து இருப்பதால், அதனை இடிக்க வேண்டும் என பொய்யான தகவலுடன் தொடர்ந்து மதுரை மாநகராட்சிக்கு மனுக்கள் அனுப்பி மன உளைச்சல் அளித்து வருகிறார் எனவும், மதுரை மாநகராட்சி மண்டலம் 1ன் அலுவலர்கள் ஆய்வு செய்த போது, மதுரை மாநகராட்சி அங்கீகாரம் பெற்ற பொறியாளர் திரு.பாஸ்கர் என்பவர் ஆய்வு செய்து மேற்கண்ட கட்டிடம் வலிமையாக உள்ளது என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது எனவும், மேலும் திரு.கு.சந்திரன் அவர்கள் மேற்கண்ட கட்டிடத்தின் பழைய உரிமையாளரிடம் ஒரு பக்கம் சுவரை பூசுவதாக கூறி ரூ.50,000/–ஐ பெற்றுக் கொண்டு இது வரை அச்சுவற்றை பூச விடாமல் தடுத்து வருகிறார் எனவும், மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் தலைமையில் 25.04.2025 அன்று மேற்கண்ட கட்டிடத்தை கள ஆய்வு செய்த போது பொதுப்பணித்துறையிடமிருந்து கட்டிட உறுதித் தன்மை குறித்த சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது எனவும், மேற்படி திரு.கு.சந்திரன் கட்டிடத்திற்கும் திரு.வேணுகோபால் கட்டிடத்திற்கும் இடையில் சுமார் 10 அடி இடைவெளி உள்ளது என்றும், உறுதி சான்றிதழினை விரைவில் பெற்று சமர்ப்பிக்கப்படும் என்றும் அதுவரை மேற்கண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பது அவரது வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சேதமுற்ற கட்டிடம் தொடர்பாக மதுரை மாநகராட்சி மண்டலம்1–ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில், மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளருக்கு பொதுப் பணித் துறையிடமிருந்து கட்டிடத்திற்கான உறுதி தன்மைச் சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு தெரிவித்து இருப்பதும், எதிர்மனுதாரரான திரு.T.வேணுகோபால் அவர்களின் சார்பாக விசாரணையில் ஆஜரான திரு.G.சந்திரசேகரன் அவர்கள், உறுதி சான்றிதழினை விரைவில் பெற்று சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ள நிலையில், பொதுப்பணித்துறை மூலமாக சான்றினை விரைந்து சமர்ப்பிக்குமாறு மனுதாரரை அறிவுறுத்தவும், மேலும் அச்சான்றினை பெற்ற பின்னர் அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் எதிர்மனுதாரர் திரு.T.வேணுகோபால் அவர்கள் மதுரை மாநகராட்சி கால்வாயை ஆக்கிரமித்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டு, அதனை கள ஆய்வு செய்து, ஆக்கிரமிப்பு இருப்பின், உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. சந்திரன்,
எண் 12, கோல்டன் அவென்யு தெரு,
பார்க் டவுன், தபால் தந்தி நகர் அஞ்சல்,
மதுரை–625 017.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை–2

3) உதவி ஆணையர்,
மண்டலம் 1 (கிழக்கு), மதுரை மாநகராட்சி,
சர்வேயர் காலனி, அழகர் கோவில் ரோடு,
மதுரை 625 007.

4) திரு. தி. வேணுகோபால்,/
எண் 2/367, அய்யாவு தேவர் நகர்,
கண்ணனேந்தல் மெயின் ரோடு,
மதுரை–625 014.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

6) இணை இயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

14/7/25

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032